மலைசூழ் மாநகர் திருவண்ணாமலையில் ஐந்து கட்டங்களாக

அருணை தூய்மைப்பணி! மக்கள் அமோகப் பாராட்டு!

பொங்கல் பரிசுகளை வழங்கி அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஜன. 15–

திருவண்ணாமலை மாநகரில் தூய்மை அருணை அமைப்பு ஐந்து கட்டங்களாக மக்கள் பணியை செய்து வருகிறது என்று, தூய்மை அருணையின் ஒருங்கிணைப்பாளர்கள், தூய்மைக் காவலர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பொங்கல் பரிசுகள் வழங்கும் விழாவின்போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசும்போது குறிப்பிட்டார்.

‘திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம்’ என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர் வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த ஜூலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

14.01.2026 புதன்கிழமை காலை 7.30மணிக்கு, திருவண்ணாமலை, மலப்பாம்பாடியில் உள்ள கலைஞர் திடலில் தூய்மை அருணையின் ஒருங்கிணைப்பாளர்கள், தூய்மைக் காவலர்கள் என 1200க்கும் மேற்பட்டோருக்கு பொங்கல் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு தூய்மை அருணையின் மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமை வகித்தார்.

தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா விஜயரங்கன், இல.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள், தூய்மைக் காவலர்களுக்கு பொங்கல் பரிசுகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை, எம்.பி., இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், இல.குணசேகரன் உட்பட பலர் உள்ளனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் கலந்து கொண்டு தூய்மை அருணை ஒருங்கிணைப்பாளர்கள், தூய்மைக் காவலர்கள் 1200க்கும் மேற்பட்டோருக்கு பொங்கல் பரிசுகள் வழங்கி, தூய்மை அருணையின் அமைப்பாளரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

திருவண்ணாமலை ஒரு ஆன்மீக நகரம், இம்மாநகருக்கு வெளிநாடு, வெளி மாநிலம், வெளி யூரிலிருந்து இலட்சக்கணக்கான ஆன்மீகப் பக்தர்கள் வருகைத் தருகிறார்கள். திருவண்ணாமலை மாநகரம் தூய்மையாக இருக்க வேண்டுமென்பதற்காக 2017ஆம் ஆண்டு இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பாக மஞ்சள் சீருடை அணிந்த 1000க்கும் மேற்பட்ட தூய்மைக் காவலர்கள் ஒவ்வொரு ஞாயிறும் தூய்மை பணி, கால்வாய் தூர் வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

இரண்டாம் கட்டமாக அருணை மாநகர் மலையால் சூழ்ந்துள்ளதால் இங்கு வெப்பம் அதிகமாக உள்ளது. எனவே சுற்றுச்சூழலைச் சமன்படுத்த மரம் நடுதல் என்ற திட்டத்தை கடந்த 8 வருடங்களாக மரம் நடுதல், பராமரித்தலை செய்து வருகிற காரணத்தினால்தான் இன்றைக்கு திருவண்ணாமலை மரங்கள் நிறைந்த மாநகரமாக உள்ளது.

மூன்றாவது கட்டம் என்னவென்றால், ஒவ்வொரு தாய்மாரும் தன் வாரிசை ஆரோக்கியமாக பெற்றெடுக்க வேண்டுமென்று விரும்புவர். அவர்களின் கனவை நிறைவேற்றத் தான் தூய்மை அருணை அமைப்பு, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வளைகாப்பு நடத்திடும் நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. இதனால் 600 பிரசவங்கள் நடைபெற்று, தாயும்சேயும் நலமுடன் வாழ்ந்து வருகின்றனர். அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரசவத்திற்கும் இலவசம், ஒரு வருடத்திற்கு குழந்தைகளுக்கான சிகிச்சை செலவும் இலவசம். அதனோடு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி திட்டத்தின்கீழ் ரூ.18000யும் பெற்றுத்தருகிறது இந்த அமைப்பு.

மக்கள் அமோகப் பாராட்டு!

நான்காவது கட்டம், நம் உயிர் காக்கும் நீர் நிலைகளை பாதுகாப்பது என்ற அடிப்படையில் அய்யங்குளத்தை நாம் கணக்கில் எடுத்துக் கொண்டோம். இந்த அய்யங்குளம் 500 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தது. இங்குதான் அண்ணாமலையார் தீர்த்தவாரி நடைபெறுகிறது. மேலும், தீபத்திருவிழாவின் ஒருக்கட்டமாக தெப்பல் திருவிழா நடைபெறும். நமது முன்னோர்களின் கடனான தர்ப்பனம் இங்குதான் நடைபெறுகிறது. இந்த அய்யங்குளம் சேறும், சகதியுமாக இருந்தது. அதை தூய்மை அருணை சார்பில் தூர் வாரி, படிக்கட்டுகள் அமைத்து மக்களின் அமோகப்பாராட்டுதல்களை பெற்றுள்ளது.

ஐந்தாவது கட்டம் என்னவென்றால், நம்முடைய பழைய அரசு மருத்துவமனை எதிரிலிருந்த ஒரு மிகப்பழமையான கட்டத்தை அப்புறப்படுத்தி, அங்கு ஒரு திருமண மண்டபம் அல்லது சமுதாயக்கூடம் என்று எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் அதை கட்டினோம். அதை துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் திறந்து வைத்தார். அந்த திருமண மண்டபம் பொதுமக்களுக்கு, குறிப்பாக ஏழைகளுக்கு பயன்பட வேண்டுமென்று, அதை தூய்மை அருணை அமைப்பு மாநகராட்சியிடமிருந்து ஒப்பந்தம் பெற்று, மக்களுக்கு இலவசமாக அளித்துக் கொண்டிருக்கிறது. முதலில் வந்து யார் பதிவு செய்கிறார்களோ அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இப்படி ஐந்து கட்டங்களாக தூய்மை அருணை அமைப்பு மக்கள் பணியைச் செய்து வருகிறது. இப்படியொரு அமைப்பு தமிழ் நாட்டில் எங்குமில்லை என பாராட்டி வருகின்றனர்.

தை முதல் நாளே தமிழர்களின் ஆண்டு தொடங்குகிறது என்று தமிழறிஞர்களின் வாக்கினை நிறைவேற்றியது நமது அரசு. உழவன் சேற்றில் கை வைத்தால்தான், நாம் சோற்றில் கை வைக்கமுடியும். இந்த அற்புதமான தைத்திருநாளை அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம். பொங்கலோ பொங்கல்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார்.

பங்கேற்றோர்!

விழாவில் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் துரை.வெங்கட், சினம் பெருமாள், ஜீவரேகா விஜயராஜ், ஆர்.கே.பாஸ்கர், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், டி.எல்.எம். வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர் ம.செந்தில், சு.விஜி (எ) விஜயராஜ், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா. அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கு.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர். நாகராஜ், கு.குமார், மண்டி ஆ.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.இராஜாமணி, அ.திவாகர், ரமணா ஜி. பழனி, க.பிரகாஷ், பி.ஜி.முருகன், கே.கோபி.சங்கர், சென்னை சுரேஷ், ஏ.முபாரக், லயன் பா.ஷெரீப், க.ஏழுமலை, எஸ்.ஜாகீர் உசேன், இரா. ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், மு.ஹக்கிம் சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு எஸ்.பிரபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பிணைக் கூட்டணி

வழக்குகளையும் விசாரணை அமைப்புகளையும் காட்டி
தலைவர்களை
சிறைப்படுத்தி விட்டால்
அவர்களது தொண்டர்களும் பொதுமக்களும்
தங்களையே ஆதரிப்பார்கள் என நம்புகின்றனர்...

ஆனால்

கடத்திக்கிட்டு வந்திருக்காங்கன்னு
தெரிஞ்ச பிறகு
ஆசி கூறி யாரும்
அட்சதை போட
மாட்டார்கள்.. ...

அது போலத்தான்

அரசியலிலும்
வற்புறுத்தி மிரட்டி உருவாக்கப்படும்
கட்டாயக் கூட்டணிக்கு
வாக்குகளும்
கிடைக்காது
மக்களிடம்
வரவேற்பும்
இருக்காது.

என்னநாஞ் சொல்றது

மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

சேலம் அரசு கலைக் கல்லூரியில் –

1,492 மாணவ - மாணவியர்களுக்கு மடிக்கணினிகள்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம், ஜன. 15-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி எம்.பி. முன்னிலையில் நேற்று (14.01.2026) சேலம்7 அரசு கலைக் கல்லூரியில் 1,492 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் எதிர்கால தலைமுறையினரான மாணவ, மாணவிகள் உலகளவிலான கல்வியைக் கற்று பயனடையும் வகையில் நான் முதல்வன், உயர்வுக்குப் படி, புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், இல்லம் தேடிக்கல்வி திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் கல்வியையும், மருத்துவத்தையும் இரண்டு கண்களாக கருதி முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பள்ளிக்கல்வித் துறைக்கென அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடானது மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது கல்வி, சாலை கட்டமைப்பு வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் 90 சதவீதம் பெற்றிருக்கின்ற மாநிலமாக திகழ்ந்து வருகின்றது. அந்தவகையில், ஒன்றிய அரசால் வெளியிடப்பட்ட பொருளாதார வளர்ச்சி பட்டியலில் 11.19% பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்து சாதனை படைத்துள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர், பெரியார் போன்ற தலைவர்களாலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களாலும் இந்த நிலையை நாம் அடைந்துள்ளோம்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில், மாநில அளவிலான “உலகம் உங்கள் கையில்” என்ற விழாவில், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள். இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு முதற்கட்டமாக 5,609 மடிக்கணினிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ், மாணவ, மாணவியர்களுக்கு கணினித்திறனை மேம்படுத்த வன்பொருள் மற்றும் மென்பொருளுடன் கூடிய மடிக்கணினிகள் வழங்குவதன் மூலம் கல்லூரி மாணவர்களுக்குக் கணினி கல்வியை எளிதாக்கி, மாணவர்களுக்கு கணினி கல்வி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கி தொழில்முனைவோராக மாற்றவும் மற்றும் ஆராய்ச்சி துறையில் சாதிக்க துடிக்கும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்கவும் முடியும். அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் சேலம்7 அரசு கலைக்கல்லூரியில் பயிலும் 1,492 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், சேலம் 7 அரசு கலைக் கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் ஜ.பிரேமலதா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருப்பத்திற்கேற்ப பயணிக்கும் சிறப்பு சுற்றுவட்ட

‘சென்னை உலா’ - 5 பாரம்பரியப் பேருந்துகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் – இயக்கத்தை தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன. 15–

போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் - “சென்னை உலா” - விருப்பத்திற்கேற்ப பயணிக்கும் சிறப்பு சுற்றுவட்ட பாரம்பரியப் பேருந்து இயக்கத்தை, நேற்று (14.1.2026) சென்னை அண்ணா சதுக்கம் பேருந்து நிலையத்தில் கொடி அசைத்து பயணத்தை தொடங்கி வைத்து, பயணம் மேற்கொண்டார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, நகரின் முதன்மை பொது பேருந்து நிறுவனமான சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம், ஒரு அற்புதமான நகர-சுற்றுலா அனுபவத்தை வழங்கத் தொடங்குகிறது. “சென்னை உலா” பேருந்து - “ஹாப்-ஆன் ஹாப்-ஆஃப்” சேவைகளுடன், முதன்முதலில் 5 பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. மேலும், அவை சென்னையின் மையப்பகுதியில் உள்ள சின்னமான மற்றும் கலாச்சார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இணைக்க வடிவமைக்கப்பட்ட வட்டச் சுற்றுப் பாதையில் இயக்கப்படும். இதனால் பண்டிகைக் காலத்தில் நகரின் பாரம்பரிய அடையாளத்தை சென்னைவாழ் மக்கள் மற்றும் பார்வையாளர்கள் கண்டுகளிக்க முடியும்.

பழங்கால மற்றும் பாரம்பரியத் துடன் கூடிய 5 பேருந்துகள்:

பழங்கால/பாரம்பரியம் - 1980களின் காலகட்ட பேருந்துகள் — சென்னையின் பொதுப் போக்குவரத்து பரிணாமத்தை நினைவு கூறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பயணிகள் குறிப்பிடப் பட்டுள்ள நிறுத்தத்திலும் ஏறவும் இறங்கவும் கூடிய ஹாப்-ஆன் ஹாப்-ஆஃப் (HO-HO) மாதிரி - அணுகல் மற்றும் வசதி உள்ளது.

குறிப்பாக மகளிர், வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள், பள்ளி குழுக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு நன்மை பயக்கும்.

இந்தப் பாரம்பரியப் பேருந்தில், மாற்றுத்திறனாளிகளும் எளிதாகப் பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பேருந்துகளில் உள்ள சிறப்பு சேவைகள்:

சென்னையில் உள்ள முக்கிய வரலாற்று, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு அடையாளங்களை இணைக்கும் வகையில் 30 கி.மீ நீளமுள்ள ஒரு வளையமாக இந்தப்பாதைதிட்டமிடப்பட்டுள்ளது.

ஒரே ஒரு பயணச்சீட்டு மூலம் நாள் முழுவதும் பயணம் செய்வதற்குரிய கட்டணம் - ரூ. 50 மட்டுமே.

சென்ட்ரல் ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், மெரினா கடற்கரை மற்றும் நடத்துனரிடம் இருந்து இதற்குரிய பயணச்சீட்டுகளை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், சென்னை ஒன் செயலி வழியாக மின்னணு பயண சீட்டுகள் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் சொகுசுப் பேருந்து (De luxe) கட்டணத்தில் மற்ற பேருந்துகளைப் போல இப்பேருந்தில் பயணிக்கலாம்.

பொங்கல் பண்டிகை காலத்தில் இந்த சேவை ஜனவரி 16-18 காலை 10:00 மணி முதல் இரவு 11:00 மணி வரையிலும் இயக்கப்படும்.

வார நாட்களில் மாலை 4:00 மணி முதல் இரவு 11:00 மணி வரையிலும்

வார இறுதி நாட்கள்/பொது விடுமுறை நாட்களில் காலை 10:00 மணி முதல் இரவு 11:00 மணி வரையிலும் இயக்கப்படும்.

அடுத்தடுத்த பேருந்து சேவை 30 நிமிட இடைவெளியுடன் இருக்கும்.

இதைப் போல் வின்டேஜ் தோற்றத்தில் உள்ள பேருந்துகள் உலகளவில் முக்கிய நகரங்களில் பயன்படுத்தப்படுகிறது. நமது சென்னை மாநகரத்திலும் மக்கள் சேவையில், சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் (MTC) - “சென்னை உலா” பாரம்பரியப் பேருந்து விருப்பமான நிறுத்தத்தில் ஏறி, பிடித்தமான இடத்தில் இறங்கி ரசிக்கலாம். மீண்டும் அடுத்து வரும் “சென்னை உலா” பேருந்தில் உங்கள் பயணத்தைத் தொடரலாம்.

இந்த முயற்சி பொங்கல் கொண்டாட்டங்களுக்கு மதிப்பு சேர்ப்பது மட்டுமல்லாமல், நகர்ப்புற கலாச்சார அனுபவங்களுடன் பொது போக்குவரத்தை ஒருங்கிணைப் பதற்கான ஒரு முன்னுதாரணத்தையும் உள்ளடக்கியது. இனிவரும் விழாக்களில் இதேபோன்ற பாரம்பரியம் மற்றும் சுற்றுலா இயக்க சேவைகளை ஊக்குவிக்கும் வகையில் இப்பேருந்துகள் இயக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அரசு முதன்மை செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் டாக்டர். த. பிரபு சங்கர், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எஸ்.புஷ்பராஜ் தலைமை! செ.தமிழ்வேந்தன் முன்னிலை!

திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 74வது வட்ட திமுக சார்பில் திராவிட பொங்கல்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பரிசுப் பொருட்கள் வழங்குகிறார்!

சென்னை,ஜன.15

திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 74வது வட்ட திமுக சார்பில் திராவிட பொங்கல் திருவிழா மற்றும் கோலப் போட்டி மற்றும் விளையாட்டு போட்டிகள் 18.01.2026 அன்று காலை 10.00 மணி தொடங்கி மாலை 6.00 மணி வரை ஏகாங்கிபுரம் முதல் தெரு, அயன்புரம், சென்னை 23.-ல் வட்டச் செயலாளர் எஸ். புஷ்பராஜ் தலைமையில் நடைபெறுகிறது. இதில் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கி சிறப்பிக்கிறார்.

இதில் மேயர் பிரியா, கலாநிதி வீரசாமி எம்.பி. தாயகம் கவி எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழத்தினர் பங்கேற்கின்றனர்.

விடுமுறை அறிவிப்பு!

தை முதல் நாள் தமிழர் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் திருநாளையொட்டி ‘முரசொலி’ அலுவலகத்துக்கு 15.01.2026 - வியாழக் கிழமை மற்றும் 16.01.2026 - வெள்ளிக் கிழமை ஆகிய இரு நாட்கள் விடுமுறை.

எனவே ‘முரசொலி’யின் அடுத்த இதழ் 18.01.2026 -ஞாயிறு அன்று வழக்கம் போல் வெளிவரும்.

- தலைமை நிர்வாகி
முரசொலி

அ.தி.மு.க.வை அமித்ஷாவுக்கு அடிமைக்கட்சியாக்கிய எடப்பாடி!

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கடும் தாக்கு!

அரியலூர், ஜன. 15-

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் எனும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை போக்குவரத்து மற்றும் மின் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் துவங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளரிடம் பேசினார். அ.தி.மு.க.வை தேடி பா.ஜ.க. வந்து கூட்டணி பேசிய நிலையில் தற்போது பா.ஜ.க.வை தேடி அ.தி.மு.க. சென்று பேச்சுவார்த்தை நடத்தும் நிலை உள்ளது குறித்து செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில்...

கடந்த காலங்களில் எல்லாம் பார்த்து வருகிறோம் எடப்பாடி பழனிச்சாமி வீரா வசனம் பேசுவார். பிறகு டெல்லி சென்று சரண்டர் ஆவார். ஒவ்வொரு முறையும் இந்த காட்சி நடைபெறும். இப்போதும் அந்த காட்சி நடைபெற்றிருக்கிறது. போன வாரத்தில் நாங்கள் தனித்து ஆட்சி என்று அறிவித்தவர், அடுத்த இரண்டு நாட்களில் டெல்லி சென்று சரண்டர் ஆகிறார்.

டெல்லிக்கு அடிமைக் கட்சி என முதல்வர் அ.தி.மு.க.வை குறிப்பிடுவது போல, அமித்ஷா அடிமை கட்சி என்கின்ற அளவிற்கு அ.தி.மு.க.வை எடப்பாடி பழனிச்சாமி அடமானம் வைத்துள்ளது தான் இது வெளிப்படுத்துகிறது.

இருபது டபுள் டக்கர் பேருந்துகள் முதற்கட்டமாக வாங்குவதற்கு மாநகர போக்குவரத்து கழகம் டெண்டர் விட்டுள்ளது அது முடிந்தவுடன் முதற்கட்டமாக சென்னையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனநாயகன் பட விவகாரத்தில் முதலமைச்சரும் கருத்து தெரிவித்துள்ளார்கள் இன்று தணிக்கை வாரியம் மத்திய அரசின் ஆயுதங்களில் ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது என தெரிவித்தார்கள் அதே தான் எங்களது நிலைப்பாடு என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
260	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2	Supply of Radial Seals and Bypass Seals and cold end gratings for Airpreheater 2A and 2B for 600 MW

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/274/ஒப்பந்தப்புள்ளி/2026

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர துறை வடக்கு

வ.வ.அ.இ.பொ.து.வ.செ.ப.ந.க.எண். பி4/523/2025 **மின்னணு ஒப்பம்**

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

பணியின் விவரம் : பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 5 லாரி நிலையம் 02 எண்ணிக்கையிலான (Front End Loader) களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் 300 நாட்களுக்கு பணியமர்த்துதல்

பணியின் மதிப்பு :- ரூ.45,19,872/- முன் வைப்புத் தொகை :- ரூ.45,200/-

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **02.02.2026 மாலை 03.00 மணி**
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **03.02.2026 மாலை 3.30 மணி**
மேலும் விபரங்களுக்கு : **http://tntenders.gov.in**

செ.ம.தொ.இ / 278 / ஒப்பந்தப்புள்ளி / 2026 **மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)**